6) சோகம் என்பதன் கருத்து (வேகம், துன்பம், கோபம், புன்னகை)
7) மரணம் என்பதன் எதிர்ச் சொல் (பிறப்பு, இறப்பு, சனன்ம், உற்சவம்)
8) கொள்ளையிட்டு என்பதை பிரித்தால் (கொள்ளை +யிட்டு, கொள்ளை + இட்டு, கொள்ள+ இட்டு, கொள்ள+ யிட்டு)
9) காயமுற்றிருந்தார் என்ற சொல்லைப் பிரித்தால் (காய +முற்றிருந்தார், காயம் + உற்றிருந்தார், காயம + முற்றிருந்தார், காய + உற்றிருந்தார்)
10) நாடோடி என்றால் (வேடர், வேற்றுநாட்டார், காட்டுவாசிகள், கொள்ளைக் கூட்டத்தாா, ?)

சரியான சொல்லின் கீழ் கோடிடுக

1) வெண்ணை, வெண்ணெய், வெண்நெய், வென்னெய்.
2) உயர்ச்சி, உயற்சி, உயச்சி, உயர்ற்சி
3) நீர்வீட்சி, நீர்வீட்ச்சி, நீர்வீழ்ச்சி, நீர்வீள்ச்சி
4) தீவட்டி, தீவெட்டி, தீவற்றி, தீவர்த்தி
5) நூத்தல், நூர்த்தல், நூற்றல், நூற்த்தல்

பின்வரும் வாக்கியங்களை நிறைவு செய்வதற்கு பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் இருந்து தெரிவு செய்து அச்சொல்லின்கீழ் கீறிடுக

1) குயில் கூவியது போல மயில் .........................................
(கத்தியது, பேசியது, கதறியது, அகவியது)
2) இடிமுழக்கம் கேட்டதுதான் தாமதம் வானம் உடைந்தது போலப் பெருமழை .......................(துளிர்த்தது, சிந்தியது, பொழிந்தது, தூறியது)
3) வீசுவநாதன் குடிசையை வைக்கோலினால் .........................................
(கட்டினான், வேய்ந்தான், மூடினான், மேய்ந்தான்)
4) கோமாளியின் பேச்சைக் கேட்ட சபையோர்.........................................
(குசுகுசுவென்று, படபடவென்று, வீறுவிறுவென்று, கலகலவென்று)
5) கொள்ளிக்கட்டையால் சுட்டது போல.........................................
(கொளுத்தியது, எறிந்தது, வீசியது, சுட்டது)
6) விலங்குகள் என்பதன் கருத்து .........................................
(இயந்திரங்கள், கால்நடைகள், வீதிகள், மரக்கலங்கள்)
7) வயலிலே பெண்கள் அரிவி .................................
(கொய்தார்கள், அரிந்தார்கள், வெட்டினார்கள், அறுத்தார்கள்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


8) பனைக்கு வடலி என்பது போல கமுகுக்கு ..............................
(நாற்று, குட்டி, பிள்ளை, களை)
9) சங்கமம் ஏதோ கூறமுற்பட்டதும் நா .........................................
(தளதளத்தது, துருதுருத்தது, தடதடத்தது, நொளுநொளுத்தது)
10) செல்லத்தின் தோட்டில் பதிக்கப்பட்டிருந்த இரத்தினம் நீல ஒளியைப் ......................(பொழிகிறது, கக்குகிறது, சிந்துகிறது, தெளிக்கிறது)
11) ஆனை கட்டுமிடம் பந்தி எனப்படுதல் போலக் குதிரை கட்டுமிடம் ..........................(பண்ணை, மந்தை, கூடம், இலாயம்)
12) மகன் இறந்த செய்திகேட்ட சந்திரமதி அடியற்ற மரம்போல ....................................
(புரண்டாள், ஓடினாள், வீழ்ந்தாள், கிடந்தாள்)
13) கலைவிழாவிற்கு தேவையான பொருட்கள் யாவற்றையும் விலை கொடுத்து ...................(வேண்டினோம், பெற்றோம், வாங்கினோம், எடுத்தோம்)
14) தந்தையார் மகனின் படிப்புக்காக பணத்தைச் சுளைசுளையாக ..............................(அள்ளிக்குவித்தார், அள்ளிக்கொட்டினார், அள்ளித்தெளித்தார், அள்ளியிறைத்தார்)
15) தாயைக்கண்ட குழந்தையின் கண்ணில் இருந்து ......................... நீர் சிந்தியது.(பொலுபொலுவென்று, மளமளவென்று, கடகடவென்று)

## தமிழ்த் திறன் எழுத்துப் போட்டி பற்றி விபரங்கள்

**பாலர் பிரிவு: வயது 9 ற்குக் கீழ் 1.10.86 ற்கு பின்பு பிறந்தவர்கள்**

1) 25 சொற்கள் இடைவெளி நிரப்புதல் (50 சொற்கள் முன் கூட்டியே கொடுக்கப்படும்)
2) பந்தி பார்த்தெழுதுதல்
3) பந்தி இடைவெளி நிரப்புதல் போன்றவை

**கீழ்ப் பிரிவு: வயது 10 – 12 (1.10.84 – 30.09.86) இடைக்காலங்களில் பிறந்தவர்கள்**
1) 100 சொற்கள் முன் கூட்டியே கொடுக்கப்படும் (இவற்றில் 25 சொற்கள் இடைவெளி நிரப்புதல்
2) மாதங்கள், கிழமைகள், இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள நகரங்களின், கிராமங்களின், பெயர்கள், உறவுமுறைகள், புலவர்கள், எழுத்தாளர்களின் பெயர்கள் எழுதுதல்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மத்திய பிரிவு: வயது 13 – 16 (1.10.81 – 30.09.84) இடைக்காலத்தில் பிறந்தவர்கள்**

1) சிறுவர் பகுதியைக் கவனிக்கவும் மாதிரி வினாத்தாள் உள்ளது. அதில் இருந்து சில கேள்விகள் சேர்க்கப்படும்.
2) நீங்கள் தாயகத்தை விட்டு வந்து 5 வருடங்களுக்கு மேலாகின்றது. உங்கள் ஊர் பாடசாலையில், படித்துக்கொண்டிருக்கும் தோழன்/ தோழிக்கு டென்மார்க் பாடசாலைபற்றி என்ன எழுதுவீர்கள் **அல்லது** தமிழ் வளர்த்த பெரியார் ஒருவரைப்பற்றி, குறைந்தது A4 அளவு தாளில் ஒரு பக்கம், எழுத வேண்டும். முக்கிய குறிப்பு: மாதிரிக் கட்டுரைகள் வேண்டுமாயின் எங்கள் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**மேற்பிரிவு: 16 – 19 (1.10.78 – 30.09.81) இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்கள்**
1) சிறுவர் பகுதியைக் கவனிக்கவும் மாதிரி வினாத்தாள் உள்ளது. அதில் இருந்து சில கேள்விகள் சேர்க்கப்படும்.
2) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைப்பற்றி கட்டுரை எழுதும் படி கேட்கப் படுவீர்கள்
அ) தமிழர் பண்பாடு, ஆ) தாய்மொழிக் கல்வியின் அவசியம்
இ) தமிழர் திருநாள், ஈ) பணிவுடமை, உ) தமிழ்மொழி
(குறைந்தது A4 தாளில் இரண்டு பக்கம்)
**முக்கிய குறிப்பு:** உதாரணக் கட்டுரைகள் வேண்டுமாயின் ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டால் அனுப்பி வைக்கப்படும்.
3) 5 தலையங்கங்கள் கொடுக்கப்படும். அதில் ஒன்றை தெரிவு செய்து A4 தாளில் குறைந்தது ஒருபக்கம் எழுதவேண்டும்.

**விண்ணப்ப இறுதித் திகதி: 09.09.95, எழுத்து மூலமான விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.**

**போட்டி எங்கே எப்போ நடைபெறும்?**
இது ஒவ்வொரு நகரசபைப்பகுதியிலும் இருந்து கிடைக்கும் விண்ணப் பங்களின் எண்ணிக்கையில் தங்கியுள்ளது. 23.09.95 சனிக்கிழமை 14.00 மணிக்கு நடைபெறும். இட விபரம் பின்பு அறிவிக்கப்படும்.
**முடிவுகளும் பரிசுகளும்:**
பரிசு பெறுபவர்களுக்கு பரிசுகள் ஒன்றிய கலாச்சார விழாவின் போது 07.10.95 சனிக்கிழமை 19.00 மணிக்கு வழங்கப்படும். முடிவுகள் எல்லோருக்கும் அறிவிக்கப்படும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பிறந்த திகதிகளை உறுதிப்படுத்துவதற்காக **PERSONNUMMERBEVIS** ஐ,போட்டியிற்கு வரும் போது கொண்டு வரவேண்டும்.
விண்ணப்பிக்கவேண்டிய விலாசம்.- T.D.Venskabs Forening, P.O.Box 103, 7400 Herning

தொலைபேசி தொடர்புகளுக்கு: து.செல்வக்குமார். *97 12 55 93*

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## வீட்டிற்கொரு மரமும் - குடும்பத்திற்கொரு மனிதரும்

*சீ.அருணாசலம், பகாவ், மலேசியா*

மௌனச் சூட்டில்
நம்மை நாமே
எரித்துக் கொண்டது போதாதா?
இப்போது மரங்களும்
நம்மை எரிக்கத் தொடங்கி விட்டதா?

இனியொரு விதி செய்வோம்...
வெட்டிடுவோம்...
வீழ்த்திடுவோம்...
தேவையற்ற மரங்களையும்...
மனிதர்களையும்!

புதியதோர்
அறைகூவல் அவசரமாய்
அனுப்பிடுவோம்...
வீட்டுக்கொரு மரமும்
குடும்பத்திற்கொரு மனிதனும்
உடனடியாகத் தேவையொன்று!

அழுக்கு மரங்களுக்கும்...
அழுக்கு மனிதர்களுக்கும்...
இங்கே அழைப்புக் கொடுத்தது யார்!

அசைவற்ற காற்றுக்கு
இங்கே என்ன வேலை!

எல்லாமே...
சுகப் பிறப்புத்தான்!
பிறந்த பின் தான் தெரிகிறது
மறப்பது எல்லாம் சுகமானதல்ல!
வேண்டாம்... இனியும் வேண்டாம்
வீதிக்கொரு இதயம்
இறுகிப் போக வேண்டாம்!

நாட்டுக்கொரு நல்லவரும்...
வீதிக்கொரு மரமும் போதுமா?
இதுவென்ன ஏலம் போடும்...
எக்காளமா?

புதியதோர் விதி செய்வோம்...
நஞ்சற்ற மரங்களும்
நயம் கொண்ட மனிதர்களும்
நல்லிதயங்களும்
நாளும் நமக்கு வேண்டும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அருவுருவம்

நெடுங்கதைத்தொடர்.......**முல்லையூரான்**

④

ராமின் வீடு கலகலப்பாகத்தொடங்கியது.அழகிய பூவர்ணங்கள் பதித்த அந்த விலைமதிப்புள்ள சோபாவும் அதற்குமுன்பாக உள்ளசோபாவுக்கான மேசையில் உடைக்கப்படாத வெளிநாட்டுக் குடிவகைகள் வைக்கப்பட்டிருந்தன.சின்னச்சின்ன கோழிக்குஞ் சுகள்போன்ற கையடக்கமான வெள்ளைக்கிளாசுகள் மேலே தொங்கும் மின்விளக்கில் பளபளத்தது.

"சிலர் கலந்துதான் குடிப்பினம்" என்ற பரிட்சயத்துடன் கொக்கோ கோலாப் பெரியபோத்தலுமொன்று அருகில் நின்றது.

ஐன்னல் கேட்டின்களை சரிசெய்தபடி ராம் அழகான கடதாசிப் பூமரங்களையும் அரக்கிவைத்து தனது திருப்திக்கு சரிசெய்துகொண்டான். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இத்தகைய தண்ணிப்பார்ட்டிகளை ரம்மியமாக ஒழுங்குசெய்வதில் ராம் டென்மார்க்கில் தமிழர்களிடையே புகழ்பெற்றவன்.

தொலைபேசிமணி அடித்தது.

நீண்டு வளர்ந்த தலைமயிரைக்கோதியபடி சிங்கப்பூர் பூச்சேட்டுக்குள்ளால் எட்டிவிழுந்து ராமின் அசைவுகளுக்கேற்ப ஊஞ்சலாடும் அந்த தங்கச் சங்கிலியின் பதக்கம் அவன் தொலைபேசியில் பேசும்போதே அவனது வாயிடை செல்லமாக கடிவேண்டிக்கொண்டிருந்தது.

"எங்க ஜேர்மனியிலயிருந்தோ..?

சுவீசுக்கோ.....சரி.....

பொம்பிளைப்பிள்ளை எண்டபடியால...வலுகவனமாகக் கொண்டு வரவேணும்........

10.000 டனிஸ்குரோன் தாருங்கோ ஆள் திங்கக்கிழமை சுவிசில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அந்தப்பிள்ளையின்ர மாப்பிள்ளையிட்ட இருக்கும்.
......சரியோ....
என்ன கஸ்டப்பட்ட குடும்பத்துப்பிள்ளையோ?
அதுக்கென்ன நான் செய்யிறது...
நாடு கடக்கிறதெண்டால் கஸ்டப்பட்டவையளுக்கு சரிவராது.
ஊரில பார்த்து கலியாணத்த செய்திருக்கலாம்தானே....
அண்ண ஏன் கனக்கக் கதைப்பான்.
நாளைக்கு சனிக்கிழமை. காசைக்கொண்டு வாறியள்.
நான் மிச்ச அலுவல பாக்கிறன். சரியோ.
சரி சரி வைக்கிறன்.
நாளைக்கு ஒரு 12 மணிபோல வாருங்கோவன்.

தொலைபேசியைத் துண்டித்து விட்டு சோபாவில் அமர்ந்துகொள்ளவும் வாசற்கதவைத்திறந்துகொண்டு அவர்கள் உள்ளே வருகின்றார்கள்.
தலைமயிரை வளர்த்து பின்னால் இழுத்துக்கட்டியபடி வாறது மாறன். அச்சுவேலிப்பொடியன்.
கசங்கின சேட்டும், ஒரு கிறுதாத் தாடியும் வைச்சபடி வாறது அது சிவன்.மரக்காலையில வேலைசெய்யிறவன்.
இலங்கையில எஞ்சினியர் படிப்புமுடித்தகையோடு வந்து இங்கு ஒரு கொட்டலில வேலைசெய்யிறவன் யோகி. நல்லாத் தண்ணி பாவிப்பான்.
பாவிச்சால் பகிடி கேட்கேலாது.
அதாரது ஒரு சின்னப்பொடியனும். பெயர் பாலன்.
சின்னக்குடிகாரன் என்று செல்லமாக அழைக்கப்படும் அவன் விஸ்கியையும் சோடாவையும் சரியளவாக கலப்பதில் சூரன்.
குடிச்சால் பேசாமலே இருப்பானாம்.
தமக்கை கொழும்பில் கான்சரோடு போராடுவது தெரிந்ததிலிருந்து குடிப்பவன். கோழித்தொழிற்சாலையொன்றில் வேலையில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தனது சின்னவிரல்களை சதா முறிப்பவன்.
"வாருங்கோடா ....வாருங்கோடா.வெள்ளிக்கிழமை என்றால் கொண்டாடவேணும்".
மின்விளக்குகள் அணைக்கப்பட்டன.
தேவாலயங்களில் சுடரும் மெழுகுதிரிகள் சில ஏற்றப்பட்டன.
மெல்லிய இருளும் மெல்லிய ஒளியும் கலந்தாற்போல் ....கிளாசுகள் பலமுறை நிறைந்து முடிந்து ....சிரிப்புகள்.....பகிடிகள்.... அடிக்கடி கலந்துதமிழும் டனிசுமாக கேலிப்பாடல்கள்.
"மேசையில அடிக்காத....இது புதுமேசை"
தாளம், பாட்டு அடுத்தவீட்டு பெண்கள் பற்றிய வம்புப் பேச்சுகள் எல்லாமாக ராமின்வீடு கலகலப்பாக இருந்தது.
கச்சிதமான ராம்வீட்டு அடுக்களை இறைச்சி அவியலிலும், தூள் மணத்திலும் இருக்க அடிக்கடி கால்கள் தடுமாற சென்றுவரும் இவர்களின் மதுபோதைக்கலக்கத்துள் அடிக்கடி மலசலகூடம் பூட்டித்திறந்துகொண்டது.
"விழுந்துபோடாத கவனமாப்போ"
"சரி சொல்லு மச்சான்."
"எடடா அந்தக்கிளாச எண்ணுறன்"
"கோலா முடியப்போகுது"
இந்த உரையாடல்களுக்குள்ளும் ஓடிக்கொண்டிருக்கிற நேரத்திற்கும் ஈடுகொடுக்கமுடியாத மெழுகுவர்த்திகள் நூர்ந்து போயின.
இப்போதுதான் கதவுவின் அழைப்புமணி துடித்ததோடு நிர்மல் கதவைத்திறந்துகொண்டு உள்ளேவந்தான்.
"நீ பார்க்கவேணுமெண்டு போட்டோ எடுப்பிக்கச் சொன்னாய். கலாக்காவின்ர படம் இண்டைக்குத்தான் வந்தது"
படத்தை கையில் கொடுக்கவும் "லைற்றைப்போடுங்கோ என்ர வருங்கால மனுசியைப் பாப்பம்" என்று ராம்கூறவும் லைற் எரிந்தது. (தொடரும்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சமூகக் கூச்சமற்ற ஒரு சிறுகதை

அன்புடன் திரு. க.ஆதவன் அவர்களுக்கு!

இது ஒரு பகிரங்கக் கடிதம் மட்டுமல்ல உங்களுடனான சமகாலப்படைப்பாளி என்கின்ற ஒருவனின் கோபமும்தான்.

"இண்டைக்கு கட்டாயம் எழுதவேணும்.இதை ஒரு சிறுகதையாக்கி எங்கையாவது பத்திரிகையில் போடவேணும்" என்ற முத்தாய்ப்போடு தொடங்கும் உங்களுடைய "கூச்சம்" என்ற சிறுகதை(கற்பகம் இதழ்: 4 ல் வெளிவந்தது) படித்துக்கூச்சமடைந்தேன்.

வர வர இன்றைய புலம்பெயர் படைப்பாளிகள் பலருக்கு பொறுப்புணர்வு என்பதே அற்றுப்போய்விட்டதா என்ற எனக்குள் இருக்கும் ஆச்சரிய வினாவிற்குள் உங்களையும் வைத்துப்பார்க்க என்னால் இயலாவிட்டாலும் இது ஒரு சமூகம் சார்ந்த பிரச்சனை என்பதையிட்டு நீங்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று விரும்புகின்றேன்.

காரணம் என்னவெனில்: தெரிந்தோ தெரியாமலோ புலம்பெயர்ந்த ஈழத்து மக்களுள் பலவகையில் நிறைவற்றிருக்கும் இன்றைய சூழலில் உங்களைப்போன்ற படைப்பாளிகளின் படைப்புக்களையே நாளைய திருக்குறளாக எடுத்துக்கொண்டு எதிர்கால புலம்பெயர் சமூகம் வருமென்றால் அது தமிழின் அழிவிற்கான ஒரு ஆரம்பத்தை திரு.க.ஆதவனே தொடக்கிவைக்கும் மஞ்சட்பத்திரிகை நாகரிகமாகிவிடக்கூடாது என்ற எச்சரிப்பொன்றை இன்றைய காலகட்டத்தை பிரதிபலிப்பவர்களில் நானும் ஒருவன் என்றரீதியில் சொல்லிவைக்கவேண்டிய கடமைப்பாடு என்முன்னுள்ளது.

சிறுகதை எடுத்துக்கொண்ட உள்ளடக்கமோ: இன்றை உலக மனிதவாழ்வுப் போக்கின் இருவகைப்பட்ட வாழ்க்கைமுறையை அலசுவதாகும். மனித வாழ்வியலின் ஒருபாகமான காமித்தலை தங்களுக்கே உரித்தான பாணியில் சொல்லிமுடிக்கும்போது: படைப்புக்களுக்கு விசேட அந்தஸ்தைக்கொடுக்கும் "பொதுமைப்படுத்தல்" என்கின்ற அற்புதமான விடையம் மறைக்கப்பட்டு ஒரு ஒரு பிரசையின் அந்தரங்க விடையம் ஆராயப்படுகின்ற நிலைக்கு தங்கள் படைப்பு கொண்டுவரப்பட்டது: தங்கள்மீது நான் சுமத்துகின்ற முக்கிய குற்றமாகும். கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்கின்ற இருவேறு மனித வாழ்வொழுக்கத்துள் நீங்கள் நிற்கின்ற இடமானது இன்றைய புலம்பெயர்ந்த தமிழர்களிடையே நீங்கள் ஏற்படுத்தும் ஒரு அறியாத்தனமான கருத்தியலாகும்.இங்கு ஒதுக்கப்பட்ட இந்த ஒருபக்கத்துள் நான் எழுத விரும்புவதை சொல்ல இடமின்மையினால் உங்கள் பதில்கண்டு இன்னமும் எழுதுவேன் கோபத்தோடு.

அன்புடன்

முல்லையூரான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சாதி, குலம், கோத்திரம்:
# இப் பிசாசு நம்பிக்கை என்று மறையும்?

அருள் சத்தியநாதன்

## *சாதி பார்ப்பவரே கீழ்சாதிக்காரர்!*

***உயர் சாதி என்ற உணர்வு முற்றிலும் போலியானது. வெறும் கற்பனை மட்டுமே. அதுவும் அவர்களது சொந்த திருப்திக்காக அவர்களாகவே உருவாக்கிக் கொள்ளும் கற்பனை மட்டுமே. வேண்டுமானால் ஒரு 'பயன்பாட்டை' சுட்டிக்காட்டலாம். 'கீழ் சாதி' எனப்படுவோரை சமயம் கிடைக்கும் போதெல்லாம் குத்திக் காட்டி தமது வக்கிரப் புத்தியை சொறிந்துவிட்டுக்கொள்ள உதவுகிறது. சாதி பார்க்கிறவர்களை என்று நாம் தீண்டத்தகாதவராகக் கருத ஆரம்பிக்கிறோமோ அன்றுதான் இப் பிசாசு நம்பிக்கை நம்மை விட்டு அகல ஆரம்பிக்கும்.***

சாதி, குலம், கோத்திரம் எல்லாம் இன்று யார் பார்க்கிறார்கள்? அதெல்லாம் முடிந்து போன விடயம் என்று பலர் குறிப்பாக இள வயதினர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உண்மை அதுவல்ல.

இந்தப் பிசாசுத் தனமான நம்பிக்கை இன்னும் சமூக அமைப்பில் இருந்து முற்றிலுமாகக் களைந்து எறியப்படவில்லை. வலுவிழந்து இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். இந்தியாவில் போல் இங்கு இல்லை என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் சாதி பார்ப்பது என்பது நேரடியாகவும் மறைமுகமாகவும் நம்மிடையே இராவணன் தலையாக பல்வேறு விதமாக முளைவிட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

திருமண விளம்பரங்களை எடுத்துக்கொள்வோம் பல விளம்பரங்கள சாதிப் பெயருடன்தான் ஆரம்பிக்கின்றன. தமது சாதிக்காரர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும் என்று கோரும் பெற்றோரையும், வேறு சில 'உயர்' சாதிகளைக் குறிப்பிட்டு அக்குலத்தினரும் விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிடும் பெற்றோரையும் திருமண விளம்பரப் பந்திகளிலே நாம் காண்கிறோம். 'தாழ்ந்த' சாதிக்காரர்கள் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருக்கிறார்களா என்ன! அவர்களும் இப் பந்திகளில் தமது 'தாழ்ந்த' சாதியைக் குறிப்பிட்டு சமூகத்தில் தமது அந்தஸ்தை மீள் உறுதிப்படுத்திக் கொள்கிறார்களே! திமண விளம்பரங்கள் பெரும்பாலும் பெற்றோரால் செய்யப்படுபவை என்பது உண்மையானாலும் அத்தகைய விளம்பரங்களில் உள்ள குலம், கோத்திரம் பற்றிய அறிவிப்புகள் சம்பந்தப்பட்ட மகள் அல்லது மகன்மாருக்கு ஏற்புடையதே என்றுதானே கொள்ள வேண்டியிருக்கிறது! சாதி பற்றி எதுவும் நாம் குறிப்பிடத் தேவையில்லை என்று


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏன் இந்த இளைய பரம்பரையினரால் பெற்றோருக்கு எடுத்துக்கூற முடியாதுள்ளது என்ற கேள்வி எழும்புகிறதல்லவா?

இப்படி ஒரு கேள்வி எழும்பினால், இளைய பரம்பரையினரிடமிருந்து ஒரு மழுப்பல் பதில் கிடைக்கும். நான் என்ன செய்ய? எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லைதான். பெற்றோர் விருப்பத்துக்காக விட்டுக்கொடுத்து சும்மா இருக்கிறேன் என்பதாக பதில் சொல்வார்கள். சீதன விடயத்திலும் இவர்கள் பதில் பெரும்பாலும் இப்படித்தான் இருக்கும். தனது சங்கடமான விருப்பத்தை இன்னொருவர் பெயரைச் சொல்லி நிறைவேற்றிக் கொள்ளும் பாணியே இது. சாதி வித்தியாசம் பார்க்கும் தன்மை நவீன பரம்பரையினரிடமும், ஜீன்ஸ், டிரெக்ஷூ, துள்ளாட்டம், கொழும்பு ஆங்கிலம் ஆகியவற்றின் பின்னாலும் மறைந்து நிற்கிறது என்பதே சரி.

சாதி பாகுபாட்டை எதிர்த்த பாரதியார், விவேகானந்தர் மறைந்தே நூறு வருடங்கள் ஓடி விட்டன. சாதி என்பது பெயரைப் பொறுத்த விடயம் அல்ல முற்றிலும் குணத்தைப் பொறுத்த விடயம் என்று கூறிய புத்தர் மறைந்து இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும் தமிழர்கள் குறிப்பாகப் பெண்கள் சாதியை விட்டபாடில்லை.

இந்திய உபகண்டப் பிராந்தியத்தை எடுத்துக்கொண்டால் சாதியின் ஆணிவேராக இந்து மதம் திகழ்கின்றது. ஆனால் சாதி அடிப்படையில் சமூகத்தைப் பிரிக்கும் இந்த நடைமுறை இந்தியாவிலிருந்து தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியானதாகச் சொல்லிவிடமுடியாது. பண்டையகால உலகின் பல பாகங்களில் இந்தச் சாதி உணர்வு இருந்திருக்கின்றது. ஏழை, பணக்காரன் என்ற அடிப்படையிலும், தொழில் அடிப்படையிலும், சமய அடிப்படையிலும், கடவுளைப் பூஜிக்கும் முன்னுரிமை அடிப்படையிலும், அரச சேவையாளர் என்ற அந்தஸ்து அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் சாதி வித்தியாசம் பார்க்கப்பட்டு வந்துள்ளது. விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் சாதி பற்றி ஆங்காங்கே குறிப்புகள் காணப்படுகின்றன. யூதர்கள் மட்டுமே ஆளப்பிறந்தவர்கள் என்ற உணர்வு அவர்களுக்குத் தொடர்ச்சியாக ஊட்டப்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. ஏனைய கோத்திரத்தார் அடக்கி வைக்கப்பட வேண்டியவர்கள் அல்லது அழிக்கப்பட வேண்டியவர்கள் என்ற கட்டளை யூதர்களுக்குப் பிறப்பிக்கப்படுவதை விவிலியத்தில் நாம் காண்கிறோம். சாதி வித்தியாசத்தை மிக வெளிப்படையாக மறுதலிக்கும் ஒரே சமயமாக இஸலாம் விளங்குகிறது ஆயினும் நடைமுறையில் ஷீட், ஷியா, சுன்னி என்பதமாக அம்மக்களிடம் வித்தியாசம் காணப்படுவது, இல்லாத ஒன்றின் அடிப்படையில் மனிதர்களைப் பிரித்துப்பார்க்கும் இத்தன்மை எவ்வளவு சக்தி வாய்ந்ததாக உள்ளது என்பதையே உணர்த்துகிறது.

சாதி உணர்வு கொண்டோர், அதாவது 'உயர்' சாதியினர், தமது பக்கத்தை நியாயப்படுத்தும் முகமாக தேன் கூட்டை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்வார்கள்.

தேன் கூட்டில் உயர் ஸ்தானத்தில் இருப்பது இராணி தேனி. அதற்குக் கீழே வேலையாள், படைவீரன் என்று பலவகைத் தேனீக்கள் தத்தமது கடமைகளை ஆற்றி வருகின்றன. ஒரு தேன்கூடு முறையாக செயற்பட்டு தேனீக்களின் உலகமாக விளங்க தேனீக்கள் இவ்வாறு பிரிந்து தத்தமது வேலைகளைக் கவனிப்பது மிக அவசியம். இல்லையேல் தேன்கூடு தேன்கூடாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இருக்காது. மனிதர்களும் ஒரு சமூகமாக சமுதாயமாக ஒரு இராச்சியமாகச் செயற்பட வேண்டும் என்பதற்காகவே சாதிமுறை வகுக்கப்பட்டது. ஒரு சமூகம் ஒழுங்காக இயங்குவதற்கு, அரசன், பிரபு, தோட்டி, சலவையாள், வியாபாரி, விவசாயி என்று பல்வகையினர் தத்தமது கடமைகளை ஆற்றிவர வேண்டியது அவசியம். இத் தொழில் வித்தியாசமே பின்னர் சாதியாக உருவெடுத்தது. உயர் சாதியினர் முன்வைக்கும் கிளிப்பிள்ளை வாதமே இது.

இந்து இந்தியாவில் இந்த அடிப்படையில்தான் சாதி பிறந்திருக்க வேண்டும். மகாபாரதம், இராமாயணம் ஆகிய காப்பியங்களில் இவ்வர்ண வித்தியாசத்தை நாம் காண்கிறோம். இச்சாதி அமைப்பை ஒரு சமூகக் கோட்பாடாக அறிமுகப்படுத்தியவர் மனு என்று கருதப்படுகிறது. மனு தர்மத்தில் சாதியமைப்பு பற்றி விஸ்தாரமாகச் சொல்லப்படுகிறது. மனுவுக்குப் பின்னரே சமூக அளவில் மட்டும் இருந்து வந்த சாதி வித்தியாசம், சமய, ரீதியான அந்தஸ்து பெற்று உயர் சாதி, தாழ்ந்த சாதி, தீட்டுப்பட்டவன் என்றெல்லாம் தலையெடுத்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

பரிணாமவாத அடிப்படையில் பார்த்தால், முனைந்து வெற்றிபெறும் உயிருக்கே வாழும் உரிமை என்ற ரீதியாகவே உயிரினங்கள் வளர்ச்சி பெற்று வந்திருப்பதை அவதானிக்கலாம். மனிதன் என்ற உயிரினம் இப் போட்டா போட்டியில் இறுதி வெற்றியை அடைய முடிந்ததனாலேயே இன்று மனிதனால் சகல உயிரினங்களையும் கட்டியாளமுடிகிறது. இதற்கு மேல் மனிதர்களும் தமது அமைப்புக்குள் முதலிடத்தை வகிக்க சதா போட்டி போட்டு வருகிறார்கள். இது மரத்தின் மீதேறி உச்சாணிக் கொம்பில் அமர்ந்து கொள்ளும் அந்தக் குரங்கின் குணம்தான். பஸ்ஸில் ஏறினாலும் கொஞ்சம் உயரமான இருக்கையில் அமர்ந்து கொள்ளத்தானே விரும்புகிறோம்! இந்தக்குரங்குபுத்திதான், சமூக அமைப்பில் முதலிடமும், முதல் மரியாதையும் பெறவேண்டும் என்ற ஆவல்தான், சாதிமுறைக்கு தொடர்ச்சியாக உரமேற்றி வந்திருக்கிறது. உளவியல் ரீதியாக மனிதன் கூட்டாகவும் சார்ந்து வாழவும் விரும்புகிறான். சமூகத்தில் சாதிபாகுபாடு உக்கிரம் பெற்றது இப்படித்தான்.

இந்து மதத்தோடு சாதிமுறை கலந்துள்ளது. சாதியில் இருந்து சமயத்தை விலக்கி வைத்து விட்டு சமூக ரீதியாக ஆராயும்போது, அன்றைய சூழல்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கக் கூடிய சாதி அமைப்பு இன்றைய சூழ்நிலைக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்புடையது தானா என்ற கேள்வி எழுவதைத் தவிர்ப்பதற்கில்லை.

உயர் சாதிக்காரர்களின் கிளிப்பிள்ளை வாதம் சாதி அமைப்பின் பரிணாம வளர்ச்சியை நியாயப்படுத்துகிறதே தவிர, இன்றைக்கு சாதி அவசியமா என்பதையும் பொருளாதார மற்றும் தனிமனித அபிவிருத்திக்கு சாதி அமைப்பின் பங்களிப்பு என்ன என்பதையும் எடுத்துக்கூறுவதாக இல்லை. எதிர்கால நலன்களுக்கு இந்த அமைப்பு வழங்கக் கூடிய நன்மைகள யாவை என்பதை இவர்கள் சொல்கிறார்கள் இல்லை.

சாதி அமைப்பு இன்றைய சூழலில் எவ்வகையில் செயற்பட்டு வருகிறது என்று பார்ப்போம்.

உயர் சாதிக்காரர்கள் என்ற அந்தஸ்து கர்ப்பக்கிரகம் வரை சென்று மூலவரை கண்குளிரக் கண்டு வணங்கும் ஸ்பெஷல் உரிமையை வழங்குகிறது. உயர்சாதி என்ற பெருமிதத்தை அளிக்கிறது. உயர்சாதி என்ற தோரணையில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அச்சமூக உயர்மட்டத்தினருடன் பழகும் வாய்ப்பை தருகிறது. உளவியல் ரீதியாக ஒரு பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கிறது.

உண்மையில் இந்த உணர்வுகள் அனைத்துமே போலியானவை. கற்பனை. தமது சொந்த மன நிறைவுக்காக உருவாக்கிக் கொள்ளும் கற்பனை என்பதே சரி. இதைத் தவிர வேறு எந்த ஒரு நன்மையையும் அளிப்பதாகத் தெரியவில்லை. இன்னும் ஒன்று. கீழ்சாதி எனப்பட்டோரை சமயம் கிடைக்கும் போதெல்லாம் குத்திக்காட்டி, வக்கிரப்புத்தியை சொறிந்து விட்டுக் ளொள்ளவும் பயன்படுகிறது.

நம்முடன் நெருங்கிப் பழகுவோரில் சிலர் நம்மை அவர்கள் வீடுகளுக்கு அழைக்க முற்படுவதில்லை. அவர்கள் உயர் சாதிக்காரர்களாக இருந்து, நாம் என்ன சாதியோ என்ற குழப்பம் அவர்களிடையே ஏற்பட்டு இருக்குமானால், இவர்களை வீட்டுக்கு அழைத்து எப்படி சம அந்தஸ்து கொடுக்கலாம் என்ற யோசனையில் நம்மை வீடுகளுக்கு அவர்கள் அழைக்காதிருக்கலாம். ஒருவர் வேதனையுடன் தான் அவமானப்பட்டதை என்னிடம் கூறினார்.

அவருடன் நன்று பழகும் அந்நண்பர் அடிக்கடி இவர் வீட்டில் தங்கி சாப்பிட்டு செல்லும் பழக்கமுடையவர். ஆனால் ஒருபோதும் தனது வீட்டுக்கு அழைத்ததில்லை. இவரும் அதைப் பொருட்டாகக் கொள்ளவில்லை. ஒரு தடவை எதிர்பாரதவிதமாக இருவரும் கொழும்பில் சந்தித்துக் கொண்டார்கள். பேசும்போது திடீரெனஞாபகம் வந்தவராக , உன்வீடு கொழும்பில் தானே இருக்கிறது என்று நண்பரிடம் கேட்டிருக்கிறார். நண்பரும் ஆமாம் என் மாமா வீடு இங்கு பம்பலப்பிட்டியில்தான் என்று சொல்லி வா போய்வரலாம் என அழைத்திருக்கிறார். இருவரும் கடற்கரையோரமாக உள்ள வீட்டிற்கு சென்றிருக்கிறார்களா. வாசலில் இவரை இருக்கச் சொல்லிவிட்டு நண்பர்மட்டும் உள்ளே சென்றிருக்கிறார். ஒரு நாற்காலியை எடுத்து வந்து போர்டிகோவில் அமரச்கொல்லியிருக்கிறார். பின்னர் உள்ளே சென்ற நண்பர் சுமார் ஒரு மணித்தியாலம் வரை வெளியே வரவில்லை. தேனீர் தயாரிக்கும் ஓசை கேட்டிருக்கிறது. தேனீர் அவருக்குத் தரப்படவில்லை. எல்லாம் முடிந்து நண்பர் வெளியே வந்து அமர்ந்திருந்தவரை தெருவுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

இவ்விடயத்தை சொல்லி வருத்தப்பட்ட அவர் நான் கீழ்சாதியாக இருக்கலாம் என்ற சந்தேகம் காரணமாகவே என்னை அவர் வீட்டுக்குள் அழைத்துச் செல்லவுமில்லைஅ பச்சைத்தண்ணீரைக் கூடத் தரவுமில்லை என்று நண்பரின் நடத்தைக்குக் காரணமும் கூறினார். அது சரியானதாக இருக்கலாம்.

இம்மாதிரியான நேரங்களில் பாதிக்கப்பட்டவர் சிவனே என்றிருக்காமல், தன் ஏமாற்றத்தை பட்டவர்த்தனமாக எடுத்துச்சொல்லி அச்செயலைக் கண்டிப்பதுடன் தனது சுயமரியாதைக்கும் சற்றும் குறைந்தது அல்ல என்பதை புட்டுக்காட்ட வேண்டும். சாதி என்பது வெறும் மாயை என்பதை இடித்துக் காட்ட வேண்டும். பின் நிற்கக் கூடாது.

சாதி என்ற ஒனறு இருக்கவே வேண்டுமானால் அது சுத்தம் அசுத்தம் என்பதாகவும் ஊயர் குணம், இழி குணம் என்பதாகவும் மட்டும் இருக்கட்டும். பிராமணன் பிராமண அந்தஸ்து பெறுவது பிறப்பால் அல்ல, செய்கையாலேயே என்றார் புத்தர், தன் நண்பரை வீட்டு வாசலில் நிற்க வைத்தது மூலம் அந்நபர் தன்னைத்தானே மிகவும் தாழ்த்திக்கொண்டார் என்பதே உண்மை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


குலத்தளவாகுமாம் குணம் என்று ஒரு பழமொழி உண்டே என்று சாதி பார்ப்போர் கூறலாம்.

இது சமூகப் பொருளாதாரத்துடன் சம்மந்தப்பட்டது.
நீண்டநெடுங்காலமாக தாழ்த்தப்பட்டோர் தாழ்நிலையிலேயே வைக்கப் பட்டிருந்ததினால் அவர்களுக்குப் போதிய கல்வி கற்கும் வாய்ப்பு கிட்டவில்லை. இதனால், அவர்களுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடையவில்லை. அறியாமை, வறுமை அசுத்தம் மற்றும் அடிமைத்தனத்தில் அவர்கள் உழலவேண்டியிருந்தது. அதாவது, சாதியைக் காரணம் காட்டி ஒரு பகுதி மக்களை வளர விடாமல் உயர் சாதியினர் அடக்கி வந்துள்ளனர். இதன்மூலம் தாமே அறிவுள்ளவர்கள், கடவுளின் அனுக்கிரகம் பெற்றவர்கள், செல்வம் ஈட்டக்கூடியவர்கள், தீர்ப்பு வழங்கும் உரிமை கொண்டவர்கள், சுத்தமானவர்கள், ஆரோக்கியமும் அழகும் கொண்டவர்கள் என்பதை நிலைநாட்டிக் கொள்ள அவர்களால் முடிந்தது.

ஒருவருக்கு கல்வி மற்றும் பணம் ஈட்டும் வாய்ப்புகளை மறுதலித்துவிட்டு, அவரை இருட்டில் வைத்துவிட்டு பின்னர் அந்நபரிடம் நற்குணங்களையும் பழக்கவழக்கங்களையும் எதிர்பார்ப்பது புத்திபூர்வமானதல்ல. அவரிடம், உன்னிடம் நற்பழக்கங்கள் இல்லை, சும்மாவா சொன்னார்கள், குலத்தளவே ஆகுமாம் குணம் என்று கூறிப் பரிகசிப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்? குலத்தளவே ஆகுமாம் குணம் என்பது சுத்தப் பேத்தல்.

சாதி அமைப்புக்கு இன்று தீனி போட்டு வளர்ப்பவர்கள் அரசியல்வாதிகளே. தமிழ் நாட்டில் இந்நிலை பரவலாகக் காணப்படுகிறது. இலங்கையிலும் சமீப காலமாக சாதி அடிப்படையில் சங்கங்கள் அமைக்கப்படும் அசிங்கம் அதிகரித்துவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் சில தமிழ் வேட்பாளர்கள் சாதி அடிப்படையில் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ள முயன்றதைக் கண்டோம். ஒருவர் ஒருபடி மேலே போய் தன்னை பிராமணர் என்ற அறிமுகப் படுத்திக் கொண்டு பிராமண வாக்குகளை தன்பக்கம் ஈர்க்க முயன்ற வேடிக்கையையும் கண்டோம்.

சாதிவிட்டு மாறக்கூடாது என்ற மனப்பான்மைக்கும் அத்தை மகளைத் திருமணம் செய்வதற்கும் இடையே தொடர்பு உண்டு. ஆனால் சொந்தத்தில் திருமணம் செய்து கொள்வதில் எந்தவொரு உயர்சாதித்தனமும் இருப்பதாகத் தெரியவில்லை. மருத்துவ ரீதியான ஆபத்துக்களே உண்டு. இப்படி சாதிவிட்டு போகக்கூடாது, குடும்பம் சிதறிவிடக்கூடாது. காணி பூமி வெளியார் வசம் சென்றடையக் கூடாது என்ற குறுகிய நோக்கங்களின் பேரில் திருமணங்கள் சொந்தத்தில் செய்விக்கப்பட்டு வருவதால், அங்கவீனமுற்ற அல்லது மன வளர்ச்சி குறைவுற்ற குழந்தைகள் பிறப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம். ஏராளமான குழந்தைகள் குருட்டுத்தன்மை அடைவதற்கு உறவுமுறை திருமணங்கள் காரணமாகின்றன என மருத்துவர்கள் எச்சரிக் விடுக்கும் அளவுக்கு இவ்வகை திருமணங்கள் இன்று நடைபெற்று வருகின்றன. சட்டம் இயற்றி இத்திருமணங்களைத் தடுக்கும்படி அரசாங்கத்தைக் கோரும் மருத்துவர்களின் அறிக்கை சமீபத்தில் பத்திரிகைகளில் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது. மேலும் இப்படி குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருப்பதால்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புத்திசாலித்தனமும் வித்தியாசமான முக அமைப்புகளும் கொண்ட, பரம்பரை நோய்களால் பீடிக்கப்படாத குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே இளைஞர்களும் யுவதிகளும் உறவுமுறைத் திருமணங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மாமன்மேல் மையல் கொள்வதும் அத்தை மகள் மீது ஆசைப்படுவதும் தமிழ் சினிமாவோடு நின்று விடட்டும். நமது திருமணங்கள் உறவுமுறைக்கு அப்பால் , சாதிகளுக்கு அப்பால் அமையட்டும். இது காலத்தின் கட்டாயம்.

பெற்றோரின் சாதிவெறியால் திருமணமாகாமல் எத்தனையோ பெண்கள் இன்று ஜன்னல் கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். சாதிக்குள் திருமணம் ஆகவேண்டும் என்பதால் எத்தனையோ பெண்கள் இன்று உடலாலும் மனதாலும் மற்றும் உணர்ச்சி அடிப்படையிலும் கொஞ்சமும் பொருத்தமற்ற ஆண்களை வேறுவழியின்றி மணந்து கொண்டு இயந்திரமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நமது எதிர்கால முன்னேற்றத்துக்கு தனிமனித ரீதியாகவோ அல்லது சமூக ரீதியாகவோ சாதி குலம் கோத்திரம் எவ்வகையிலும் கை கொடுக்கப் போவதில்லை. சாதிவித்தியாசம் பார்க்காத சமூகங்கள் தான் நாடுகளதான் இன்று பொருளாதார ரிதியாக முன்னேற்றம் கண்டுள்ளன. மனிதனை மனிதனாக அவனது நாணயம், பழக்கவழக்கங்களுக்காக மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமேதவிர அவனது சாதிக:காக அல்ல.

யாராவது ஒருவர் கீழ்ச்சாதிக் காரராக இருப்பாரானால் அவர் சாதிபார்ப்பவராகவே இருக்க வேண்டும் என்பதே சாதிபற்றிய நமது கொள்கையாக இருக்க வேண்டும்.

உங்களுடன் உரையாடும் ஒருவர் நீர் கள்ளரா, குடியானவனா, அல்லது பிராமணனா என்று கேள்விகேட்க ஆரம்பித்தால் பளிச்செனப் பதில் சொல்லிவிடுங்கள்.

என்னுடன் பழகிப்பார்த்து நான் பிராமணனா இல்லையா என்பதை முடிவுசெய்து கொள்ளுங்கள் என்பது உங்கள் பதிலாக அமையட்டும். ஏனெனில் பழக்கவழக்கங்களே ஒருவன் மேல் மகனா கீழ்மகனா என்பதைக் கோடிட்டுக் காட்டும். நீங்கள் உயர்சாதியாக இல்லாத பட்சத்தில் அதுபற்றி கவலையே கொள்ளவேண்டாம். ஒளிக்கவேண்டாம். இதுதான் என்னுடைய சாதி என்று பகிரங்கமாகவே சொல்லிவிடுங்கள். அதன்பின்னர் அந்தப்பேச்சையே எவரும் எடுக்கமாட்டார்கள்.சாதியை ஒரு ஜோக்காகக் கருதி அப்படியே பாவித்து வாருங்கள். உண்மையிலேயே சாதிபார்ப்பது ஒரு ஜோக் தான், சந்தேகமே இல்லை.

சாதி அமைப்பை இளைஞர்கள் மூர்த்தன்யமாக எதிர்க்க வேண்டும். தயவு தாட்சண்யமே வேண்டாம். ஏனெனில் சாதி முற்றிலுமாக ஒழித்துக்கட்டப்பட வேண்டிய ஒன்று. இது தமிழர்களின் அவலட்சண முகம். தென்னிந்திய மாவட்டங்களில் காணப்படுவதைப் போல இங்கு சாதி அமைப்பு உக்கிரம் பெற்றிருக்காவிட்டாலும், அரசியலில் ஒரு அம்சமாக விளங்காவிட்டாலும் கூட, நமது சமூக அமைப்பில் ஒரு அங்கமாக இருந்தே வருகிறது. இந்து சமய வழிபாட்டில் சாதி ஒரு நந்தியாகக் குறுக்கே அமர்ந்திருப்பது வெளிப்படை. தமிழர்களின் இந்த சாதி உணர்வுதான் அவர்களின் ஒரு பகுதியினரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயர்ந்தவன் என்றும் இன்னொரு பகுதியினரை தாழ்ந்தவன் என்றும் எடைபோடச் சொல்கிறது. தாழ்வுமனப்பான்மையை வளர்க்கிறது. உயர்சாதியினர் உயர்ந்த குணங்களைக் கொண்டவர்களாகவும் அறிவுக்கூர்மை பெற்றவர்களாகவும் இருப்பார்கள் என்ற ஒரு மாயையைத் தோற்றுவிக்கிறது.

சாதி அமைப்பைத் தகர்த்தெறிய வேண்டிய பணி இளைஞர்களுடையது. காதல் திருமணங்களை அவர்கள் கருவியாகக் கையில் ஏந்த வேண்டும்.

சரி, சாதி என்று மறையும்?

சாதி பார்ப்பவரை நாம் தீண்டத்தகாதவராகக் கருதத் தொடங்கும் போது.

நன்றி தினகரன் வாரமஞ்சரி

திரு. மு.சி . கந்தசாமி அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க இக்கட்டுரையை கற்பகத்தில் சேர்த்துள்ளோம்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## வெளிநாடு ஆச்சிபோறா!

*-பரம்-*

மார்புச் சட்டை மாட்ட மறுத்து – எங்கள்
ஊர்முழுக்க ஊர்ந்து திரிந்த ஆச்சி
பேர் ஊர் தெரியாத பிறதேசம் தேடிப்போறா – நல்ல
மார்புச் சட்டை மாட்டத்தானே போறா!

காலில் செருப்பு கட்ட மறுத்து – வெறும்
காலால் வாழ்வை கடந்து விட்ட ஆச்சி
தோலில் செய்த செருப்பு மாட்டி – அந்த
தூரதேசம் போகத் துணிந்து நிற்கிறா!

உள்ளாடை என்ற உறவை மறுத்து – சேலை
உடலில் சுற்றி ஊரில்வாழ்ந்த ஆச்சி
உள்புகுந்து உடல் விறைக்கும் குளிரை – அங்கே
உதறித் தள்ள காற்சட்டை போடப்போறா!

அரப்பு தலையில் அள்ளி வைத்து – கிணற்று
ஆடுகாலின் கீழலிருந்து தேய்த்த ஆச்சி
நுரைக்கும் வாசனை சம்போ வைத்து – குளியலறை
நுழைந்து சவரில் தோயத் தானேபோறா!

வெற்றிலையால் வெளிறிப் போன இதழ்கள் – தினம்
விரட்டும் குளிரில் வெடிக்கத் தானேசெய்யும்
பெத்தபிள்ளை பேச்சைக் கேட்டு ஆச்சி – கிறீம்
பெட்டி திறந்து பூசத்தானே போறா!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# இந்து சமயத்தின் நான்கு உண்மைகள்

## வினை

தனது நற்செயல்கள் அல்லது செயல்களுக்கு ஏற்ப, ஆன்மா விதங்களில் ஒன்றை அனுபவித்த வினை எனப்படும். இவ்விரு வினைகளும் இவ்வுலகத் துய்த்தலின் இதுவரை உள்ளன.

–சுவாயம்பு ஆகமம்–

வினை என்பது கடவுளின் பிரபஞ்ச விதி. கார்ரியம் மூலமாக அது நம் வாழ்வின் அனுபவங்களை ஆளுகிறது. கடவுளின் ஈர்ப்பு சக்தி இப்பிரபஞ்ச ஒழுங்கை உருவமைக்கின்றது. வினையின் மூலமே உங்கள் எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள், அவை நல்வாயிலும் தீயவாயிலும் அல்லது கலப்புடையதயிலும் உங்களிடமே திரும்புகின்றன. இவ்வாறாக வினையே உங்கள் ஆசான். உங்களுக்குத்தேவையான உங்களால் சந்திக்க இயலக்கூடிய படிப்பினைகளை அது தெரிவிக்கின்றது. தீர்க்கக் கூடிய உங்கள் சக்திக்கு மேற்பட்ட எந்த விதமனை நிலைமையையும் எழாதவாறு அமைந்த தெய்வீக விதி அது.

வினை என்பது ஊழ் அல்ல உங்களுக்கு தீர்மானிக்கச் சுதந்திரம் உண்டு. எந்தக்கடவுளும் புறச்சக்தியும் உங்கள் வலுவைக் கட்டுப்படுத்தவில்லை. உங்கள் வினைப் படைப்பு அதைச் செய்கிறது. உங்கள் வினைக்குப் பொறுப்புடையவராயிருத்தலே பலம் பிறரைக் குறைகூறுவது பலவீனம் ஆகவே கடவுளின் பெரும் விதியாகிய வினையை நினைவு கூர்ந்து விவேகமுடன் செயல்படுங்கள்.

## மறுபிறவி

தனது கடந்தகாலச் செயல்கள் மூலம் ஒருவன் மீண்டும் பிறக்கிறான் தனது உள்ளம் எதில் பொரந்தியதோ அவ்வடிவினை எடுக்கிறான் இந்த வலிமைமிக்க ஆன்மாவுக்குப் பிறப்பும் இல்லை மூப்பும் இல்லை இறப்பும் இல்லை ஏனெனில் ஆன்மா என்றும் நிலைத்திருப்பது அச்சமற்றது.

–பிரஹதாரணய உபநிடதம்

உங்கள் ஆன்மா என்றும் நிலைத்து ஓர் ஒளி உடலை தனது முழுமையான உன்னத உணர்வின் சாரத்தில் அது கடவுளுக்கு இணையானது. ஆயினும் இந்த இணைந்த தன்மை உணரப்பெற்று ஆன்மாவினுள் மலர வேண்டும் இந்த இலக்கை நோக்கியே உங்கள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆன்மா ஒரு பெண்ணின் உடலில் பற்பல பிறவிகளை எடுக்கிறது. தற்போது நீங்கள் உங்கள் கடந்த பிறவிகள் அனைத்துடைய மொத்த வடிவமாக இருக்கிறீர்கள். உடல், தன்முனைப்பு, மற்றும் வேட்கையின் ஆற்றல்கள் வெளிப்படும் போது மனித அனுபவங்கள் ஒவ்வொன்றையும் நீங்கள் பட்டிருக்கிறீர்கள் பிந்தைய பிறவிகளில் இவ்வாற்றல்கள் ஆனமா. இயல்பை நோக்கிப் படிமாற்றம் அடைகின்றன. இறுதயில். உங்கள் ஆன்மா இறைவனை உணருகிறது. எஞ்சிய வினைகள் அனைத்தையும் தீர்த்தபின் உங்கள் ஆன்மா ஆகமங்களும், வேதங்களும் போதிப்பது போன்று உலகங்களில் ஆன்மா தனது படிமலர்ச்சியினை நீடிக்கிறது. ஆகவே மகிழ்வுடன் வாழ்க! ஆன்மீக மலர்ச்சி முயல்க! மரணத்தைக் கண்டு அஞ்சநக!

## அறம்

ஏமாற்றப்படாத தடங்கலற்ற பொங்கி வழிகின்ற உயர்ந்த மெய்யறிவு அனைத்துப் பக்கங்களிலிருந்தும் நம்மை வந்து அடையட்டும். அதனால் தேவர்கள் நம்பால் தமது அக்கறையைத் தொடர்ந்து நாளும் நமது வழிகாட்டிகளாக நாம் முன்னோக்கிச் செல்ல எப்போதும் உதவட்டும்.

–ரிக் வேதம்–

அறம் என்பது இறைவனின் தெய்வீக விதி அதுவே இருத்தல் விதி விதையின் இயல்பான வளர்ச்சியைப் போன்றே ஒருவருக்கு அறம் அமைகிறது உள்ளார்ந்த இயற்கை மற்றும் ஊழின் ஒழுங்கமைந்த நிறைவு அது அறத்தினை பின்பற்றும்போது நீங்கள் பிரபஞ்ச அமைப்புடன் இசைந்து விளங்குகிறீர்கள் இறைவனுடைய நெருங்கி ஒத்துப் போகிறீர்கள் இந்து தருமத்தின் ஒழுக்க நெறி எண்வகை இயம நியமங்களில் உருவப்பெற்றுள்ளது.

## இயமங்கள் வருமாறு:

அஹிம்சை, திருடாமை, அவாக்கட்டுப்பாடு காமம், பேராசை விடுதல், இறுமாப்பு, சினம் தடுத்தல், பொய் கூறாமை, அநீதி தவிர்த்தல், தவறிழைத்தலையும் தீய நட்பையும் விலக்கல்.

## நியமங்கள் வருமாறு:

மனம் மொழி மெய் தூய்மை பெறுக, மானுடத்தில் நேசம் கொள்க, மன நிறைவில் நாட்டம் கொள்க, பக்தியை வளர்த்திடுக, பொறுமையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்த்திடுக, அன்பொடு கொடை வழங்குக, திருமறை பயில்க, தவம், தியாகம் செய்க.
ஒவ்வொருவரும் அவரவர் பாதையில் செல்கின்றனர் கடவளை வழிபடுக உங்கள் அறம் தெளிவுபடும்.

## வழிபாடு

நறுமணப் பொருட்கள் மலர்கள் விளக்குகள் புதிய பழங்கள் கேியவற்றை அர்ப்பணித்தலே மரவு வழி அமைந்த பூஜையின் ஐந்து அம்சங்கள் விளக்கு ஏற்றுவதால் பூஜை உச்சநலை அடைகிறது

–காமிகாகமம்–

கடவுளிடம் நமக்குள்ள மிக ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்தலே வழிபாடு பூஜை பஜனை பிரார்த்தனை தியானம் என்னும் இவை யனைத்தும் கடவுள் மற்றும் கடவுளுடன் நேரடியான இணைப்புக் கமைந்த வழிபாட்டு முறைகளாகும். கடவுள் கடவுளர் தேவர்கள் ஆகியோர் உண்மையிலேயே அக உலகங்களில் வாழ்கிறார்கள் உங்கள் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் உங்களுக்கு உதவ அவர்கள் விரும்புகிறார்கள் அவர்களால் உதவ முடியும் உங்களது வினை கர்மம் மற்றும் அறத்தின் தருமம் அமைப்புக்களுக்கிடைய அவர்கள் இதனைச் செய்கிறார்கள்.

நாள்தோறும் வீட்டில் நீங்கள் செய்யும் பூஜை உங்களைக் கடவுள் உணர்வுடையவர்களாகவும் உங்கள் இல்லத்தை புனிதமாகவும் ஆக்குகிறது அவருடன் நெருங்கி உறவாட நம்மை அனுமதிக்க வேண்டியே பல திருக்கோயில்களைகஇ கடவுள் நிறுவியுள்ளார் கோயில் பூஜை கடவுளுக்கு ஒரு வாய்க்காலைத் திறக்கிறது அவரது திருவுருவத் தோற்றம் மற்றும் சக்தியின் மூலமாகத் பிரார்த்தனைகளுக்கு விடை கிடைக்கின்றன வினைமென்மையடைகிறது ஆன்மீக மலர்ச்சிக்கு வழிகாட்டப்படுகிறது ஆகவே இறைவனிடம் சரணடையுங்கள் ஆழ்ந்த பக்தியுடன் வழிபடுங்கள் கடவுள் செவிசாய்க்கிறார்.

வினை மறுபிறவி அறம் வழிபாடு என்னும் இந்த நான்கு உண்மைகளும் வேதங்கள் மற்றும் ஆகமங்களின் வதி ஆகும் இவையே ஒவ்வொரு இந்துவின் வாழ்வுக்கும் அமைந்த கட்டமைப்பு கேட்கக்கூடிய அவைருக்கும் இவற்றைப் பற்றிக் கூறுங்கள் இப்புவியில் அனைத்து ஆன்மாக்களின் பாரம்பரியமும் இவைதாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


புரட்டாதி மாதம் தொடக்கம் கார்த்திகை மாதம் வரையில் வரும் இந்துமத விசேஷட தினங்கள்.

| September | புரட்டாதி | கிழமை | |
|---|---|---|---|
| 22.09.95 | 5 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 23.09.95 | 6 | சனி | புரட்டாதி முதலாவது சனி |
| 24.09.95 | 7 | ஞாயிறு | அமாவாசை விரதம் |
| 25.09.95 | 8 | திங்கள் | நவராத்திரி விரதாரம்பம் |
| 28.09.95 | 11 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| 30.09.95 | 13 | சனி | சரஸ்வதி பூசை ஆரம்பம், இரண்டாவது புரட்டாதி சனி |
| Oktober | | | |
| 02.10.95 | 15 | திங்கள் | ஸரஸவதி பூஜை |
| 03.10.95 | 16 | செவ்வாய் | விஜயதசமி மாநோன்பு கேதார கெளரி விரதாரம்பம் |
| 06.10.95 | 19 | வெள்ளி | பிரதோஷ வழரதம் |
| 07.10.95 | 20 | சனி | புரட்டாதி மூன்றாவது சனி |
| 08.10.95 | 21 | ஞாயிறு | பூரணை விரதம் |
| 12.10.95 | 25 | வியாழன் | கார்த்திகை விரதம் |
| 14.10.95 | 27 | சனி | புரட்டாதி நான்காவது சனி |
| | ஐப்பசி | | |
| 20.10.95 | 03 | வெள்ளி | ஐப்பசி முதலாவது வெள்ளி |
| 21.10.95 | 04 | சனி | சனிப் பிதோஷ விரதம் |
| 23.10.95 | 06 | திங்கள் | அமாவாசை விரதம், கேதார கெளரி விரதம் தீபாவளி |
| 24.10.95 | 07 | செவ்வாய் | கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 27.10.95 | 10 | வெள்ளி | சதர்த்தி விரதம், ஐப்பசி இரண்டாவது வெள்ளி |
| 29.10.95 | 12 | ஞாயிறு | கந்தசஷ்டி விரதம் |
| November | | | |
| 03.11.95 | 17 | வெள்ளி | ஐப்பசி மூன்றாவது வெள்ளி |
| 04.11.95 | 18 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| 06.11.95 | 20 | திங்கள் | பூரணை விரதம் |
| 08.11.95 | 22 | புதன் | கார்த்திகை விரதம் |
| 10.11.95 | 24 | வெள்ளி | ஐப்பசி நான்காவது வெள்ளி |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | கார்த்திகை | | |
|---|---|---|---|
| 20.11.95 | 04 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 22.11.95 | 06 | புதன் | அமாவாசை விரதம் |
| 26.11.95 | 10 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| December | | | |
| 04.12.95 | 18 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 05.12.95 | 19 | செவ்வாய் | திருக்கார்த்திகை விரதம் குமாலய தீபம் (முருகன் கோயிலில்) |
| 06.12.95 | 20 | புதன் | சர்வாலய தீபம் வீடுகளில் தீபம் விஷ்ணு தீபம் பூரணை விரதம் |
| 07.12.95 | 21 | வியாழன் | வினாயக விரதாரம்பம் |

இவ் விஷேட தினங்களுக்கான அட்டவணையை தயாரித்து உதவியவர்.

*ம.கணேசசர்மா. Billund*

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## சங்கீத இசை வகுப்புகள்

6 வயதிற்கு மேற்பட்ட சங்கீதத்தில் ஆர்வமுள்ள பிள்ளைகளுக்கு இசைப்பயிற்ச்சி வழங்குவதற்கு, திருமதி பூங்கோதை நந்தன் இசைப்பட்டதாரி ஆசிரியை **(திருவையாறு இராஜா இசைக்கல்லூரி)** அவர்கள், பலரின் வேண்டுதலுக்கிணங்க முன்வந்துள்ளார்.

வகுப்பில் சேரவிரும்புபவர்கள் எமது ஒன்றியி விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தில் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றை தயவு செய்து குறிப்பிடவும்.

வகுப்புகள் ஆரம்பமாகும் திகதி, இடம் என்பன விண்ணப்பிப் பவர்களுக்கு மட்டும் அறிவிக்கப்படும்.

## வேலையற்வருக்கு வேலை தேட உதவி, கருத்தரங்கு

எங்கள் ஒன்றியமானது IND-sam, "Etnisk Jobbank", SID என்பவற்றுடன் இணைந்து இக்கருத்தரங்கையும், வேலை தேடும் உதவித்திட்டத்தையும், உங்கள் நன்மைகருதி ஒழுங்கு செய்துள்ளது.

ஆனபடியால் பங்கு பற்றும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். மேலதிக விபரங்களை **பக்கம் 16 ல்** பார்க்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பங்கு பற்ற விரும்புபவர்களும் மேலதிக விபரங்கள் தேவைப் படுபவர்களும் ஒன்றியத்துடன் அல்லது Jobbanken, IND-sam, Bredgade 36 C, 4 sal., 1260 København K. Tlf. 33 3205 26, Fax 33 320824 (Att. Mark Goli, Projektleder) தொடர்பு கொள்ளவும்.

கருத்தரங்கின் முடிவில் வேலைதேடுபவர்கள் தங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

## தமிழ் அகதிகளுக்கு உதவி

தமிழ் அகதிகளுக்கு உதவி செய்ய விரும்புபவர்கள் பின்வரும் விலாசங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

01) Care International, 15 Kandy Road, Jaffna.
02) Church Of South India, Vaddukoddai
03) FORUD, Chulipuram & Pointpedro
04) HUDEC, P.O.Box -2, Bishop`s House, Jaffna.
05) Methodist Mission, 9,Vembadi Road,Jaffna
06) Non Violent direct Action Group. P.o.box 2, Chavakaheri
07) Redd Barna, 15 Rakka Road,Jaffna
08) Refugees Rehablitation fund 83, 374 Point Pedro Road, Jaffna
09) Red Cross Society, 73, Kandy road,Jaffna
10) Sarvodaya, 22 Rasvinthoddam, Jaffna
11) Save The Children fund (U.K), Karuvmpana Valavu, Rajaveethy, Thirunelveli
12)The Refugees Rehabilitation Organisation, 106, 4th Cross Road, Jaffna
13)Young men`s Christians Association, Kandy Road, Jaffna
14) Peoples Welfare Organisation, Irrupalai junction, Kopay

## Kulturmøde

Dato: **Søndag d.3.09.95 kl. 12-20**

Sted: Dansk Flygtningehjælp´s hus/ HK - huset, Vestergade 41 -43, Herning, Ude og inde

GRATIS ADGANG


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**Arrangør**: Dansk Flygtningehjælp i samarbejde med SID, HK's Kunstudvalg, Sprogskolen, Solsikken, Tamilsk Dansk Venskabsforening

**Musik, dans, teater, børneaktiviteter, restaurant, udstilling og meget mere.**

## தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றியம் நடாத்தும்

## கலாச்சார விழாவும் கண்காட்சியும்

விசேட நிகழ்ச்சியாக

## சிறந்த பாடகர் போட்டி

இந்த நிகழ்ச்சி டென்மார்க்கில் முதன்முறையாக அறிமுகம் செய்யப் படுகின்றது.

**சிறந்த பாடகர் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் காலம் தாழ்த்தாமல் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.**

**காலம்:** வெள்ளி – சனி (இரு தினங்கள்)

**06.10.95 - 07.10.95**

போட்டிகள் யாவும் **07.10.95** சனிக்கிழமை நடைபெறும்

முக்கிய குறிப்பு

மேலும் இசை நிகழ்ச்சியை சிறப்பிக்க லண்டனில் இருந்து **யாழ். சீலன்** வருகை தருவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிறந்த பாடகர் போட்டியில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெறும் பாடகர்களின பாடல்கள் யாவும், **லண்டனில்** இருந்து ஒலிபரப்பாகும் தமிழ் வானொலி மூலமும், **ஜேர்மனியில்** இருந்து வெளிவரும் கலை விளக்கு வீடியோ சஞ்சிகையிலும் இடம் பெறும் என்பதனைக் கவனத்தில் கொள்ளவும்.

***மேலதிக விபரங்களுக்கு பின் அட்டையில் உள்ள விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.***

www.tamilarangam.net

# Fødselsdagshilsner



**Preya Ravichandran**
பிரியா ரவிச்சந்திரன்
Herning
**14. 09. 1994**



**Nivetha Kugathasan**
நிவேதா குகதாசன்
Ikast

**12. 09. 1994**

முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இச் சிறார்களுக்கு பல்லாண்டு காலம் நீடுழி வாழ்கவென கற்பகம் வாழ்த்துகின்றது

# பிறந்த நாள் வாழ்த்துக்கள்

www.tamilarangam.net

Postbesørget blad
7401 HRC 50147

**Tamilsk - Dansk Venskabsforening**
தமிழ் – டெனிஸ் தோழமை ஒன்றியம்
**Tamil Danish Friendship Association**
**Postboks 103, DK-7400 Herning, Denmark**
**Tlf & Fax +45 97 12 55 93, Giro 695- 0892**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்